முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

61 T I

දෙවන වාර විභාගය 2024 இரண்டாம் தவணைப் பரீட்சை 2024 Second Term Examination 2024	භූගෝල විද්‍යාව I, II புவியியல் I, II Geography I, II	10 වන ශ්‍රේණිය தரம் 10 Grade 10

පැය තුනයි மூன்று மணித்தியாலம் Three hours	අමතර කියවීම් කාලය மேலதிக வாசிப்பு நேரம் Additional Reading time මිනිත්තු 10 යි 10 நிமிடம் 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

புவியியல் I

அறிவுறுத்தல்கள்
- இவ் வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டது.
- எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.

1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1) புவி மேற்பரப்பின் பரப்பளவு ..... மில்லியன் சதுர கிலோ மீற்றர் ஆகும்.
(610, 510, 620)

2) உயரத்தின் அடிப்படையில் ..... மாற்றம் ஏற்படும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வளிமண்டலத்தை பிரதான படைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
(வளியில், வெப்பநிலையில், அமுக்கத்தில்)

3) உலகில் மிக உயர்ந்த இடத்தில் அமைந்துள்ள ஏரி ..... ஆகும்.
(டிடிகாகா, சுப்ரீயர், விக்டோரியா)

4) துந்திராக் காலநிலை உலகில் ..... காலநிலை வலயத்திற்குட்பட்டது.
(அயன, இடைவெப்ப, முனைவு)

5) சிறு ஏற்றுமதி பயிர் ஆராய்ச்சி நிறுவனம் ..... யில் அமைந்துள்ளது
(மாத்தளை, கண்டி, காலி)

6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

6) புவித்தகடுகள் மூடிப்பகுதியில் செயற்படுகின்ற ..... ஓட்டங்களின் விளைவினால் நகர்கின்றன.

7) உலகில் வர்த்தக நீதியான பாற்பண்ணைகள் அதிகளவில் பரம்பிக்காணப்படும் வலயம் ..... ஆகும்.

8) புவியுடன் தொடர்ச்சியான இடைத்தொடர்புகளைக் கொண்டிருக்கும் தாவரம் மற்றும் விலங்குகள் யாவற்றையும் ஒன்றிணைக்கின்ற உயிர்ச்சூழலியல் தொகுதிகளே..... எனப்படும்.

9) படிவுவீழ்ச்சி மூலம் புவிக்கு வந்தடையும் நீரின் ஒரு பகுதி நிலத்தின் மேற்பரப்பில் ..... பாய்கின்றது.

10) உலகில் மிக ஆழமான சமுத்திர அகழிகள் ..... சமுத்திரத்தில் அமைந்தள்ளது.

- **6 தொடக்கம் 10 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் 'ச' ஐயும் பிழையாயின் 'பி' ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

11) பெருந்தோட்ட பயிர்ச்செய்கையின் விசேட பண்புகளில் ஒன்று அது ஒரு விவசாய முறையாகக் காணப்பட்டாலும் கைத்தொழில் அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது. (ச / பி)

12) குறுகிய காலத்தினுள் வளிமண்டலத்தின் நிகழும் சாதாரண நிலைமை காலநிலை எனப்படும். (ச / பி)

13) கிராஸ்கப், பிக்கெட்காப், கட்லா போன்ற மீன் இனங்கள் நன்னீர் மீன் வகைகள் ஆகும். (ச / பி)

14) குருணாகல் மாவட்டத்தில் கோணவல மாக்கந்துரயில் சேதன உரமத்திய நிலையம் நிறுவப்பட்டுள்ளது. (ச / பி)

15) இலங்கையில் ஊழியப்படையில் 31% விவசாயத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். (ச / பி)

- **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுள் நிரல் I இனை நிரல் II இடன் பொருந்தும் போது ஏற்படும் சரியான விடையை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

16)

நிரல் I **கடல்**	நிரல் II **அமைந்துள்ள சமுத்திரம்**
1. கரிபியன் கடல்	A. அத்திலாந்திக் சமுத்திரம்
2. செங்கடல்	B. ஆட்டிக் சமுத்திரம்
3. போல்டிக் கடல்	C. பசுபிக் சமுத்திரம்
	D. இந்து சமுத்திரம்

1. A,C,D 2. A,C,B 3. C,B,A 4. B,C,A

17)

நிரல் I **கண்டங்கள்**	நிரல் II **தீவுகள்**
1. ஆசியா	A. பெபின்
2. அவுஸ்திரேலியா	B. பிலிப்பைன்ஸ்
3. வட அமெரிக்கா	C. போக்லன்ட்
	D. தஸ்மேனியா

1. B,A,D 2. A,C,D 3. B,D,A 4. C,B,D

18)

நிரல் I **ஏரி**	நிரல் II **கண்டங்கள்**
1. செட்	A. வட அமெரிக்கா
2. அயர்	B. ஆசியா
3. பைக்கால்	C. ஆபிரிக்கா
	D. அவுஸ்திரேலியா

1. D,B,A 2. C,D,B 3. C,D,A 4. A,C,D

19)

நிரல் I **இரும்பு உற்பத்தி நிலையம்**	நிரல் II **அமைந்துள்ள நாடு**
1. பிட்ஸ்பேர்க் வலயம்	A. ரஷ்யா
2. யூரல் வலயம்	B. இந்தியா
3. லங்காசயர் வலயம்	C. பிரித்தானியா
	D. ஐக்கிய அமெரிக்கா


1. D,A,C 2. D,C,B 3. A,C,D 4. C,A,D

20)

நிரல் I **பயிர்கள்**	நிரல் II **ஏற்றுமதிக் கிராமம்**
1. மிளகாய்	A. கட்டுகம்பல
2. மரமுந்திரிகை	B. தம்பதெனியா
3. வெற்றிலை	C. இராஜாங்கனை
	D. அகுணகொலபெலஸ்ஸ

1. C,B,D 2. D,A,B 3. A,C,B 4. C,B,A

- **21 தொடக்கம் 25 வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் பார் வரைபடத்தை பயன்படுத்துக.**



மூலம் : இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2013

21) நெற்பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்பட்ட நிலப்பரப்பின் அளவு எந்த ஆண்டில் அதிகமாக காணப்பட்டது ? .....

22) அதிகமான நெல் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு எது ? .....

23) நெற்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட நிலப்பரப்பின் அளவு எந்த ஆண்டில் குறைவாக காணப்பட்டது? .....

24) குறைந்தளவு நெல்லுற்பத்தி இடம் பெற்ற ஆண்டு எது? .....

25) மேற்குறிப்பிட்ட வரைபு எவ்வகையைச் சார்ந்தது ? .....

- **இல 26 தொடக்கம் 36 வரையான ஒவ்வொறு வினாவுக்கும் பொருத்தமான விடைகளின் இலக்கத்தை தெரிவு செய்து அடைப்பினுள் எழுதுக.**

26) ஹவாய் தீவு பற்றிய மிகச்சரியான கூற்று யாது?
1. அத்திலாந்திக் சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு தீவாகும்.
2. ஆபிரிக்கா கண்டமேடைக்குள் அமைந்துள்ளது.
3. எரிமலை காரணமாக ஏற்பட்ட தீவொன்றாகும்.
4. ஆசியா கண்டத்திற்குரிய தீவாகும் (.....)

27) வளி மண்டலத்தின் எப்படை பற்றி பின்வரும் கூற்றுக்கள் குறிப்பிடுகின்றன,
- உயரத்திற்கேற்ப வெப்பநிலை படிப்படியாக வீழ்ச்சியடையும்
- இப்பகுதியில் நீராவி, முகில்கள், தூசு துணிக்கைகள் இல்லை
- கடல் மட்டத்திலிருந்து 80 km உயரம் வரை பரந்து காணப்படும்.
- மின்னியக்கச் செயற்பாடுகள் இப்படையில் அதிகமாக காணப்படுகின்றன.

1. மாறன் மண்டலம் 2. வெப்ப மண்டலம் 3. படை மண்டலம் 4. இடை மண்டலம் (.....)

28) முழுவதும் நிலத்தால் சூழப்பட்ட கடலுக்கு ஒரு உதாரணம் யாது?
1. ஏரல் கடல் 2. செங்கடல் 3. சீனக்கடல் 4. யப்பான் கடல் (.....)

29) அவுஸ்திரேலியா கண்டமேடைக்குள் அமைந்துள்ள தீவுகளுக்கு இரண்டு உதாரணங்கள்,
1. தாய்வான், பிலிப்பைன்ஸ் 2. பப்புவா நியுகினி, தஸ்மேனியா
3. பிரித்தானியா, ஐஸ்லாந்து தீவு 4. மடகாஸ்கர், சீசெல்ஸ் தீவு (.....)

30) இலங்கையில் குறைந்தளவு நிலத்தை நெல்லுற்பத்திகாக பயன்படுத்தும் மாவட்டம் எது?
1. பதுளை 2. அநுராதபுரம் 3. நுவரெலியா 4. அம்பாறை (.....)

31) A - 1900 mm க்கு மேல் மழைவீழ்ச்சி பெறல்
B - 300 மீற்றருக்குக் குறைந்த உயரமுடைய மென்சாய்வுகள்
C - 15^0 C - 25^0 C வரையான சாதாரண வெப்பநிலை
D - ஈரக்களிமண்
மேற்கூறப்பட்டவைகளுள் இறப்பர் உற்பத்திக்கு அவசியமான காரணிகளைக் கொண்ட விடைத்தொகுதி,
1. A யும் C யும் 2. B யும் D யும் 3. B யும் C யும் 4. C யும் D யும் (.....)

32) கற்கோளத்தில் காணப்படும் புவித்தகடுகளுள் மிகச்சிறிய தகடு ஒன்று அல்லாதது,
1. பிலிப்பைன்ஸ் தகடு 2. அரேபியன் தகடு 3. நஸ்கா தகடு 4. யுரேசியன் தகடு
(…..…)

33) A - உயர் வெப்பநிலை
B - பருவக்கால மாற்றங்களை காணக்கூடியதாக உள்ளது.
C - வருடம் பூராகவும் மிக உயர்ந்த மழைவீழ்ச்சியைக் கொண்டிருத்தல்
D - மூடுப்பனியும் மழைப்பனி வீழ்ச்சியையும் காணப்படுதல்
மேற்கூறப்பட்ட காரணிகளுள் அயன வலய காலநிலைவகைக்கு உட்பட்ட காரணிகளைக் கொண்ட விடைத்தொகுதி யாது?
1. A யும் C யும் 2. A யும் B யும் 3. B யும் D யும் 4. B யும் C யும் (…..…)

34) ஆவியுயிர்ப்புக் காரணமாக வளிமண்டலத்திற்கு நீர் சென்றடையும் விதம்,
1) கடலில் இருந்து 2. நதிகள், ஏரிகளிலிருந்து
3. தாவரங்களிலிருந்து 4. நிலக்கீழ் நீரிலிருந்து

35) 1 : 50,000 இடவிளக்கப்படத்தில் காணப்படும் பௌதீக அம்சங்களை மாத்திரம் கொண்டுள்ள விடைத்தொகுதி,
1. நதிகள், மலைத்தொடர்கள், காடுகள் 2. மலைத்தொடர், குளம், அணைகள்
3. நதிகள், முனைவுகள், கால்வாய்கள் 4. நீதிமன்றம்,பொலிஸ், பாடசாலை (…..…)

36) பின்வரும் தேசப்படங்களுள் கருப்பொருள் தேசப்படம் ஒன்றல்லாதது எது?
1. இலங்கையின் போக்குவரத்து 2. ஆசியாவின் சனத்தொகை அடர்த்தி
3. ஆபிரிக்காவின் தரைத்தோற்றம் 4. தரைத்தோற்றப்படம் (…..…)

- பின்வரும் A,B,C,D என்பவற்றால் தரப்பட்டுள்ள சோடிப்பதங்களை அவதானித்து 38 - 40 வரையுள்ள வினாக்குளுக்கு விடை தருக

A - 1. உணவு உற்பத்தி
2. சனத்தொகை வளர்ச்சி
B - 1. புவி வெப்பமடைதல்
2. கைத்தொழில் மயமாக்கல்
C - 1. சுகாதார வசதி
2. இறப்பு வீதம்
D - 1. காட்டுத்தொகுதி
2. விவசாயம்

37) முதலாவதன் அதிகரிப்பானது இரண்டாவது குறைவுபடக் காரணமாகும் சோடிப்பதம்
1. A 2. B 3. C 4. D
(…..…)

38) முதலாவதன் அதிகரிப்புக்கு இரண்டாவது காரணமாக அமைந்த சோடிப்பதம்
1. A 2. B 3. C 4. D
(…..…)

39) இரண்டாவதன் அதிகரிப்பானது முதலாவது அதிகரிப்புக்கு காரணமாக அமைந்த சோடிப்பதம்
1. A 2. B 3. C 4. D
(…..…)

40) முதலாவதன் குறைவிற்கு இரண்டாவது பெரும் செல்வாக்குச் செலுத்தியுள்ள சோடிப்பதம்
1. A 2. B 3. C 4. D
(…..…)

Past Papers Wiki

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

மாகாணக் கல்வித் திணைக்களம் வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
களம் வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
திணைக்களம் வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
க் கல்வித் திணைக்களம் வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

61 T II


දෙවන වාර විභාගය 2024 இரண்டாம் தவணைப் பரீட்சை 2024 Second Term Examination 2024	භූගෝල විද්‍යාව I, II புவியியல் I, II Geography I, II	10 වන ශ්‍රේණිය தரம் 10 Grade 10

புவியியல் II

- இவ்வினாத்தால் I, II எனும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி I உள்ள வினாக்கள் கட்டாயமானது அதில் (a),(b),(c) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுத வேண்டும்
- பகுதி II இருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்

பகுதி I

1. அ) 1: 50,000 இடவிளக்கவியல் படத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.



1) வெளி எல்லையின் மேல் ஓரத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் 2 தருக. (1 புள்ளி)
2) வெளி எல்லையின் கீழ் ஊரத்தில் குறியீட்டு விளக்கம் பிரதான எட்டு தலைப்பின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றில் இரண்டினைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
3) C எனும் எல்லையைப் பெயரிட்டு, இங்கு குறிப்பிட்டுள்ள தகவல் ஒன்றைக் எழுதுக. (1 புள்ளி)
4) 1 : 50,000 இடவிளக்கப்படத்தில் காணப்படும் அமைபவிடத்தினை இரண்டு வழிகளில் அடையாளம் செய்யலாம். அவை எவை? (1 புள்ளி)
5) 1 : 50,000 இடவிளக்கப்படத்தின் நேர்கோட்டு அளவுத்திட்டத்தை வரைந்து காட்டுக. (2 புள்ளி)
6) பின்வரும் பண்பாட்டு அம்சங்கள் இரண்டினதும் பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
   a)
   b) 
7) நிலத்தில் $4Km^2$ வயல்வெளியொன்றை 1: 50,000 அளவுத்திட்டத்தின் படி வரைந்து காட்டுக. (2 புள்ளி)

ஆ) உமக்கு வழங்கப்பட்டுள்ள உலகப்படத்தினை நன்கு அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

- இலக்கம் i - v வரை ஒவ்வொரு வினாவுக்கும் முன்னால் தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் மூன்றிலும் பொருத்தமானதை தெரிவு செய்து படத்திற்கு அருகிலுள்ள கூட்டினுள் இடுக. (5புள்ளி)

i.	அட்லஸ் மலை	A,B,C
ii.	பகாமாஸ் தீவு	D,E,F
iii.	யெனிசி நதி	K,L,M
iv.	பொபட் கடல்	S,T,U
v.	ஆர்ஜந்தீனா	X,Y,Z

இ) உமக்கு தரப்பட்டுள்ள இலங்கைப்புறவுருவப்படத்தை நன்கு அவதானித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுகு விடையளிக்க. விடையளிப்பதற்கு இலங்கைப் புறவுருவப்படத்தில் அருகில் வழங்கப்பட்டுள்ள கட்டங்களைப் பயன்படுத்துக.

- i - v வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் முன்னால் மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. மூன்றிலும் பொருத்தமானதைத் தெரிவு செய்க. (5புள்ளி)

1)	முத்துக்குளிப்பு பிரதேசம்	A,B,C
2)	இங்கினியாகல	D,E,F
3)	மன்னார் குடா	J,K,L
4)	லுணுவில	P,Q,R
5)	காலி	X,Y,Z

பகுதி II

02) i. உயிர்க்கோளம் எனப்படுவது யாது? (2 புள்ளிகள்)

ii. a) உயிர்க்கோளத்தின் சமநிலை குழம்பியிருப்பதற்கான மனித செயற்பாடொன்றை தருக.

b) உயிர்க்கோளத்தின் செயன்முறைகளைப் பாதிக்கும் இரண்டு காரணிகளைத் தருக.

(3 புள்ளிகள்)

iii. a) புவியின் மேற்பரப்பு நீர் பரம்பியுள்ள இரண்டு முறைகளைக் குறிப்பிடுக.

b) நீரின் தரம் குறைவடைந்து செல்வதனால் எதிர்காலத்தில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

03) i) புவியின் குறுக்கு வெட்டு முகத்தைக் குறிப்பிடும் பின்வரும் உருவில் A, B எனும் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ள 2 படைகளையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)


ii) a) உருவில் A,B படைகளை வேறுபடுத்தக்கூடிய எல்லையைக் குறிப்பிடுக.

b) A எனும் படையின் இரண்டு பகுதிகளையும் குறிப்பிடுக.

(3 புள்ளிகள்)

iii) a) C எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ள படையின் இரண்டு இயல்புகளைக் குறிப்பிடுக.

b) கற்கோளத்திலுள்ள வளங்களை மனிதன் பயன்படுத்தும் போது கற்கோளத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள் மூன்றினை சுருக்கமாக விளக்குக.



(5 புள்ளிகள்)

04) i) a) வட அமெரிக்காவில் காணப்படும் பிரதான மலைத்தொடர் ஒன்று,

b) ஆசியாக்கண்டத்தில் காணப்படும் சமவெளியொன்றையும் ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

ii) பின்வரும் புவியின் நிலவுருவங்களுக்கு வழங்கப்படும் பெயர்களை அதே ஒழுங்கில் குறிப்பிடுக.

a) பல்வேறு சிகரங்களையும் சாய்வுகளையும் கொண்ட உயர் எழுச்சியுடன் கூடிய பாரிய பிரதேசத்தில் பரந்திருக்கும் நிலத்தோற்றம்

b) நீரால் சூழப்பட்ட பல்லுருவ அமைப்பில் காணப்படும் சிறிய நிலப்பரப்பு

c) மலைப்பிரதேசங்களில் அமைந்துள்ள தட்டையான உயர் நிலம் (3 புள்ளிகள்)

iii) a) சமவெளிகள் பல்வகையான மானிட நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கான காரணிகள் 2 தருக.


b) ஆறுகளும் ஏரிகளும் எவ்வாறு மனித நடவடிக்கைகளில் முக்கியம் பெறுகின்றன என்பதை இரண்டு உதாரணங்களைக் கொண்டு விளக்குக. (5 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

- **வினா இலக்கம் 05 மற்றும் 06 ற்கு பின்வரும் உலகப்படத்தைப் பயன்படுத்துக.**



05) i) கைத்தொழில் இட அமைவுக்குச் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 2 தருக. (2 புள்ளிகள்)

ii) a) இரும்புருக்குக் கைத்தொழிலுக்கு பிரசித்தமான கிழக்காசிய நாடு ஒன்று. A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. அந்நாடு எது?

b) மேலே கூறப்பட்ட நாட்டில் இரும்புருக்குக் கைத்தொழில் சிறப்புற்றுக் காணப்படுவதற்கான காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) a) இரும்புருக்குக் கைத்தொழிலின் இயல்புகள் 2 தருக.

b) இரும்புருக்குக் கைத்தொழிலின் அண்மைக்காலப்போக்குகள் இரண்டினைக் குறிப்பிட்டு, ஒன்றை விளக்குக. (5 புள்ளிகள்)

06) i) உருவில் C.D எனும் எழுத்தால் காட்டப்பட்டிருப்பது ஆசியாவுக்கு வெளியே நெல்லுற்பத்தி செய்யும் நாடுகளாகும். இந்நாடுகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) a) உருவில் B எனும் எழுத்தால் காட்டப்பட்டிருப்பது உலகில் வர்த்தக நோக்கத்திற்காக தானியம் உற்பத்தி செய்யும் நாடாகும். இந்நாடு எது?

b) நெற்செய்கைக்கும் கோதுமைச் செய்கைக்கும் அவசியமான மண்வகைகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii) a) உலக நெற்பயிர்ச் செய்கையின் விசேட பண்புகள் 2 குறிப்பிடுக. (2புள்ளி)

b) உலக சந்தையில் கோதுமை முக்கியமான பயிராகத் திகழ்வதற்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3 னைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)

07) i) இலங்கையில்

a) உயர் நிலத்தேயிலை

b) மத்திய நிலத்தேயிலை

என்பவற்றுக்கு பிரசித்தமான மாவட்டங்கள் ஒன்று வீதம் தருக. (2 புள்ளிகள்)

ii) தேயிலை பயிர்ச்செய்கைக்கு அவசியமான பின்வரும் காரணிகளைக் குறிப்பிடுக.

a) மண்

b) வெப்பநிலை

c) மழைவீழ்ச்சி (3 புள்ளிகள்)

iii) a) இலங்கையில் இறப்பர் உற்பத்திப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் ஐரோப்பிய சங்கத்தின் நாடுகள் 2 தருக.

b) தற்காலத்தில் இறப்பர் உற்பத்தியுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிட்டு, அவற்றை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

08) ● பயற்றங்காய் ● லீக்ஸ் ● போஞ்சி ● கத்தரிக்காய்

i) மேற்கூறப்பட்ட மரக்கறி வகைகளில் மலை நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் இரண்டினைத் தெரிவு செய்க. (2 புள்ளிகள்)

ii) a) இலங்கையில் வாழைப் பயிர்ச்செய்கை செய்யப்படும் மாவட்டமொன்றைக் குறிப்பிடுக.

b) விலங்கு வேளாண்மையில் பால் உற்பத்தி தொடர்பாக இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் 2 தருக. (3 புள்ளிகள்)


iii) a) இலங்கையில் விவசாயம் சம்பந்தமாக,

1. சுற்றாடல் பிரச்சினையொன்றினையும்
2. வர்த்தகம் தொடர்பான பிரச்சினையொன்றையும் தருக. -

b) இலங்கையின் பொருளாதாரத்தில் விவசாயத்தின் முக்கியத்துவம் இரண்டினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

10 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් සංශෝධිත නව විෂය නිර්දේශයේ පාඩමෙන් පාඩමට



Rs : 300




Rs : 300




Rs : 300



Rs : 300



Rs : 150



Rs : 150



Rs : 150




Rs : 150




Rs : 150




Rs : 200



Rs : 300



Rs : 350



Rs : 300




Rs : 300



Rs : 150



Rs : 200



Rs : 150



Rs : 300




Rs : 300




Rs : 300

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180

LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE